**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.43/2021

வா.சா.1– பாரதி த/பெ. கந்தசாமி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 21.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.1– பாரதி த/பெ. கந்தசாமி</u>**
**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. சுப்பு உடையார் என்பவரின் மனைவி பெயர் சின்னகண்ணு (எ) நாச்சியாயி அம்மாள் ஆவார். அவர்களுக்கு 3 மகன்கள், 1 மகள் ஆவார். மகன்கள் 1. சுப்பிரமணி, 2. துரைசாமி, 3. முருகன் மகள் பூங்கொடி ஆகியோர்கள் ஆவார்கள். சுப்பிரமணியன் என்பவருக்கு 1 மகன் 2 பெண்கள் உள்ளனர். துரைசாமிக்கு 2 மகன்கள் உள்ளார்கள். தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் ஆரம்பத்தில் சுப்புஉடையாருக்கும், அவருடைய மனைவிக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். ஆரம்பத்தில் எல்லா சொத்துக்களும் சர்வே எண்.33 ல் இருந்தது.

2. சுப்புஉடையாருக்கு எவ்வளவு விஸ்தீரணம், அவருடைய மனைவிக்கு எவ்வளவு வீஸ்தீரணம் என்று எனக்குத் தெரியாது. சுப்புஉடையார் மற்றும் அவருடைய மனைவி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை பொறுத்து பத்திரம் எதாவது எழுதி வைத்துள்ளரா என்றால் எனக்குத் தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் சுப்புஉடையாருக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது.

3. நான் யாரிடம் சொத்தை வாங்கியுள்ளேன் என்றால் 3ம் பிரதிவாதி முருகனிடம் வாங்கியுள்ளேன். முருகனுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் சுப்பிரமணியனும், துரைசாமி முருகனுக்கு 21.09.2010 அன்று வா.சா.ஆ.1 ன் மூலம் கிரையம் கொடுத்துள்ளார்கள். அதில் எவ்வளவு நிலம் கொடுத்துள்ளார்கள் என்றால் 1 ஏக்கர் 13 1/2 செண்ட் கொடுத்துள்ளார்கள். மேற்படி 1 ஏக்கர் 13 1/2 செண்ட் சர்வே எண்.33ல் எங்குள்ளது என்றால் தென்மேற்கில் உள்ளது. வா.சா.ஆ.1 கிரையபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தைதான் நான் முருகனிடம் வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் கிரையம் பெற்றுள்ளேன்.

4. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு கிழக்கு துரைச்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. தெற்கு எனது அண்ணன் காமராஜ்க்கு பாத்தியப்பட்டது ஆகும். மேற்கு கந்தசாமி, ராமசாமி, சங்கப்பிள்ளை ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது. வடக்கு 12 அடி அகல கிழமேல் பாதை உள்ளது. 12 அடி கிழமேல் பாதை என்பது எந்த இடத்தில் உள்ளதாகவா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 பத்திரத்தில் எங்குள்ளது என்றால் நான்கெல்லையில் சர்வே எண்.33 ல் கிணற்றிலிருந்து நேர்மேற்காக அமைக்கப்பட்டுள்ள 12 அடி அகல கிழமேல் பொதுப்பாதைக்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. மேற்படி பாதைக்கு தெற்குப்புறம் தான் நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாதை எநத் சர்வே எண்ணில் உள்ளது என்றால் 33/1ல் தான் உள்ளது. வா.சா.ஆ.2 பத்திரத்தின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லப்படும் பி அட்டவணைச்சொத்து பாதைக்கு தென்புறம் உள்ளது. பி அட்டவணைச்சொத்தில் தென்வடல் கிழமேல் அளவு எனக்கு சரியாகத் தெரியவில்லை. பிரதிவாதிகள் 35 செண்ட்டை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளதற்கு என்ன ஆவணம் உள்ளது என்றால் ஆவணம் இல்லை பொக்லைன் வைத்து அழித்ததை நான் நேரிடையாக 18.01.2015 அன்று பார்த்தேன்.

6. பொக்லைன் வைத்து அழித்ததை நான் நேரிடையாக பார்த்தேன் என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அழித்தாக சொல்லும் தேதியில் நான் ஊரில் இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் ரசீது எதுவும் வழங்கவில்லை. புகார் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புகார் கொடுத்தாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

7. கிழமேல் பாதை கிணற்றிலிருந்து நேராக மேற்கு வரை செல்கிறதா என்றால் ஆமாம். தென்வடல் பாதை என்பது கிணற்றுக்கு கிழக்காக உள்ளது. எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 33/2 பி, 34/1 ஆகியவற்றில் உள்ளது. தென்வடல் பாதையின் நீளம் தெரியாது. கிழமேல் பாதையின் நீளம் தெரியாது. தென்வடல் பாதை எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்றால் கிணற்றின் கிழக்கு பக்கத்திலிருந்து தென்வடலாக ஆற்றுவாரி வரையும் மேலும் போத்துராவுத்தன்பட்டி சர்வே எண். 53/2G, F, H ஆகியவற்றின் நிலங்களின் கீழ்ப்பகுதியில் கிழமேல் தார்ரோட்டை சென்றடையும்.

8. 33/2 பி, யாருடைய சொத்து என்றால் 5 ம் பிரதிவாதி மதியழகன் சொத்து ஆகும். வழக்கு தாக்கல் செய்த தேதியில் வழக்கறிஞர் ஆணையர் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிழமேல் வண்டிப்பாதை என்பது யாரால் எப்போது போட்டப்பட்டது என்றால் எனக்கு நேரிடையாக தெரியாது. சுப்புஉடையார் மகன்கள் எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது.

9. தென்வடல் பாதை, கிழமேல் பாதை ஆகியவை அரசால் தயார்செய்யப்பட்டுள்ள FMB வரைபடத்தில் உள்ளதா என்றால் உள்ளது. FMB வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா–ஆ.3 FMB யில் தென்வடல் பாதை , கிழமேல் பாதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கிலும் கிழமேல், தென்வடல் பாதையின் நீளம் குறிப்பிடவில்லை என்றால்சரிதான். 4 ம் பிரதிவாதி பாப்பா 3 ம் பிரதிவாதியிடமிருந்து தனியாக சொத்து வாங்கிய நபர் ஆவார்.

10. அவர் வாங்கிய அளவு எனக்குத் தெரியாது. சர்வே எண். 33/1, 33/2 ல் வாங்கியுள்ளார். மேற்படி அவர் வாங்கிய பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது சொத்திற்கு எந்த திசையில் நான் 4 ம் பிரதிவாதி பாப்பா வாங்கியுள்ளார் என்றால் தென்கிழக்கில், 12 அடி பாதைக்கு வடக்கிலும் வாங்கியுள்ளார். பாப்பா வாங்கிய சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதானன். 1 ம் பிரதிவாதி துரைசாமி, 2 ம் பிரதிவாதி சரவணன் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான்.

11. 1 ம் பிரதிவாதி துரைசாமிக்கு எவ்வளவு விஸ்தீரணம் நிலம் உள்ளது என்று எனக்குத் தெரியாது. 5 ம் பிரதிவாதி மதியழகன் யாரிடம் சொத்து வாங்கியுள்ளார் என்றால் 3, 4 பிரதிவாதியிடம் நிலம் வாங்கியுள்ளார் எவ்வளவு வாங்கியுள்ளார்என்றால் தெரியாது. 5 ம் பிரதிவாதி வாங்கிய பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. 5 ம் பிரதிவாதி வாங்கிய சொத்தில் உரிமையில்லை என்றால் சரிதான். பாதை மட்டும் உண்டு. பாப்பா, மதியழகன் வாங்கிய பத்திரத்தில் பாதையின் உரிமை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் உரிமை குறிப்பிடவில்லை நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. பாதையில் பாப்பாவுக்கும் மதியழகனுக்கு உரிமை உண்டா என்றால் உண்டு எல்லோருக்கும் உரிமை உண்டு. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்ட 2/3 பங்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதமுள்ள 1/3 சரிபாதி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 33 ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 5 ஏக்கர் 90 செண்ட் ஆகும். சர்வே எண். 33 சப்டிவிசன் ஆகியுள்ளது. சர்வே எண். 33/1, 33/2 ல் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் எனக்கு அளவு தெரியாது.

13. 33/1, 33/2 என்று சப்டிவிசன் செய்தபோது நிலஉரிமையாளருக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் எனக்குத தெரியாது. சுப்புஉடையார் சர்வே எண். 33 ல் அவர் கிரையம் பெற்ற 2.95 செண்ட் 30.04.1983 பத்திரப்படி துரைசாமிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி ஏக்கர் 2.95 செண்ட்டில் 16.06.1986 அன்று ராஜலிங்கம் என்பவருக்கு 1ம் பிரதிவாதி 1 ஏக்கர் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. மீண்டும் ராஜலிங்கத்திடமிருந்து 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரும் கிரையம் வாங்கினார்களா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

14. சர்வே எண்ணில் 33 ல் வடபுறத்தில் கிழக்கு ஓரத்தில் 1 ஏக்கர் 53 செண்ட் இடத்தை 1ம் பிரதிவாதியும் அவரது சகோதரரும் முருகனுக்கு 20.11.2008 அன்று செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சர்வே எண். 33 ல் யார்யாருக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் என்னுடைய நிலம் மட்டும் தெரியும். வழக்குரை பி அட்டவணைச்சொத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல.

15. பி அட்டவணைச்சொத்தில் நான் குறிப்பிட்டுள்ள வடபுறம், கீழ்புற எல்லை தவறானது என்றால் சரியல்ல. பி அட்டவணைச்சொத்தின் கீழ்புறம் 1ம் பிரதிவாதியின் பாகநிலமும், 5ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் செய்த ஒரு பகுதி நிலமும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 33 ல் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் செல்லும் வகையில் பொதுப்பாதைக்கும், பொது கிணற்றுக்காகவும் 56 1/2 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டது உண்மை என்றாலும் அதை அனுசரித்து எந்த காலத்திலும் வண்டிப்பாதை அமைக்கவில்லைஎன்றாலும் 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் வண்டிப்பாதை அமைப்பதற்கு முன்பே அவர்கள் பாக நிலத்தை கிரையம்

செய்துவிட்டதாகவும் பாதை அமைப்பதற்காக முயற்சியை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

16. நான் சொல்வது போல் தென்வடலாகவும், கிழமேலாகவும் பாதை இல்லை என்றால் சரிதான். ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளதை வைத்து அமைக்கப்படாத பாதையை அழித்துவிட்டதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. முருகனுக்கு பாத்தியப்பட்ட இடத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து 4ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்பதால் பாதை இலலை என்றால் சரியல்ல. இடத்தில் உள்ள அமைப்புகளை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17. பி அட்டவணைச்சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்தததில்லைஎ ன்றால் சரியல்ல. 18.01.2015 அன்று பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து பி அட்டவணைச்சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாகவும் சி அட்டவணைச்சொத்தில பாதையை அழித்து விட்டதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள படி எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடாது என்றால் சரியல்ல.

**மேற்படி 1, 2 பிரதிவாதிகளின் முழு குறுக்கு விசாரணையும் 5ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.21 15:05:04 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**